தமிழகம் முழுவதும் பகுதிநேர வாரியாக
நிருபர்கள் தேவை (Freelancer)
நமது ஆனந்த பாஸ்கர், பேப்பர்பாய் மற்றும் தமிழ்நாடுஇபேப்பர் நாளிதழ்களுக்கு பணியாற்ற தொண்டுள்ளம் கொண்ட தன்னார்வலர்கள் (freelancer) அடிப்படையில் நிருபர்களாக பணியாற்ற, மக்கள் தொடர்பு அதிகம் உள்ள பத்திரிகை துறையில் ஆர்வம் உள்ளவர்கள், தமிழகம் முழுவதும் பகுதிநேர வாரியாக நிருபர்கள் தேவை.
www.vaniks.com
No Monthly Commitments
9337501889, 7789941009

தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

MLM SOFTWARE Company
• Binary MLM Plan
• Single Leg MLM Plan
• Autopool MLM Plan
• Unilevel MLM Plan
• Matrix MLM Plan
• Stairstep MLM Plan
• Party MLM Plan
• Board MLM Plan
• Generation MLM Plan
PRICE STARTING Rs.9999/-
+91 98537 19337

CHENNAI Volume- 3 Issue:309 24-05-2026 ஞாயிற்றுக்கிழமை Free E- Paper ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி

இன்றைய பஞ்சாங்கம்

ஞாயிற்றுக்கிழமை
24.05.2026
பராபவ ஆண்டு,
வைகாசி– 10

சூரிய உதயம் 5.52

திதி:
இன்று காலை 9.55 வரை அஷ்டமி பின்பு நவமி.

நட்சத்திரம்:
இன்று காலை 7.20 வரை மகம் பின்பு பூரம்.

யோகம் :
இன்று காலை 9.34 வரை வ்யாகாதம் பின்பு ஹர்ஷணம்.

கரணம்
இன்று காலை 9.55 வரை பவம் பின்பு இரவு 9.34 வரை பாலவம் பின்பு கௌலவம்.

யோகம் :
இன்று அதிகாலை 5.51 வரை அமிர்த யோகம் பின்பு காலை 7.20 வரை யோகம் சரியில்லை பின்பு சித்த யோகம்.

சந்திராஷ்டமம் :
இன்று காலை 7.20 வரை உத்திராடம் பின்பு திருவோணம்.

நல்ல நேரம்
காலை 7.30 – 8.30.
மாலை 1.30 – 2.30

இராகு காலம்
மாலை 4.30 – 6.00.

எமகண்டம்
பிற்பகல் 12.00 – 1.30.

குளிகை
பிற்பகல் 3.00 – 4.30.

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
ஸ்ரீராமமூர்த்தி
செல்: 8189908040

"உலக நன்மைக்காக இந்தியாவும் அமெரிக்காவும் தொடர்ந்து நெருக்கமாக செயல்படும்"

பிரதமர் மோடி

புதுடெல்லி, மே 24:

பிரதமர் நரேந்திர மோடியை, அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மார்கோ ரூபியோ சந்தித்த நிலையில், உலக நன்மைக்காக இந்தியாவும் அமெரிக்காவும் தொடர்ந்து நெருக்கமாக செயல்படும் என்று பிரதமர் தெரிவித்துள்ளார்.

இந்தியா வந்துள்ள அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மார்கோ ரூபியோ, பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்துப் பேசினார்.

இது தொடர்பாக பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மார்கோ ரூபியோ, பிரதமர் நரேந்திர மோடியை இன்று சந்தித்தார். அப்போது, பாதுகாப்பு, தொழில்நுட்பங்கள், வர்த்தகம், முதலீடு, எரிசக்தி, இணைப்பு, கல்வி, மக்கள் தொடர்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இரு தரப்பு ஒத்துழைப்பில் ஏற்பட்டுள்ள தொடர்ச்சியான முன்னேற்றம் குறித்து பிரதமருக்கு மார்கோ ரூபியோ விளக்கினார்.

மேற்கு ஆசிய நிலவரம் உட்பட பல்வேறு பிராந்திய மற்றும் உலகளாவிய பிரச்சினைகள் குறித்த அமெரிக்காவின் கண்ணோட்டத்தை ரூபியோ பகிர்ந்து கொண்டார்.

அப்போது, அமைதி முயற்சிகளுக்கு இந்தியாவின் தொடர்ச்சியான ஆதரவை பிரதமர் மீண்டும் உறுதிப்படுத்தினார். பேச்சுவார்த்தை மற்றும் ராஜதந்திரத்தின் மூலம் மோதல்களுக்கு தீர்வு காண வேண்டும் என்ற தனது எண்ணத்தை மீண்டும் வலியுறுத்தினார்.

மேலும், அதிபர் ட்ரம்ப்புக்கு தனது அன்பான வாழ்த்துகளைத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்ட பிரதமர் மோடி, இரு நாடுகளுக்கு இடையேயான தொடர்ச்சியான கலந்துரையாடல்களை ஆவலுடன் எதிர்பார்ப்பதாகவும் கூறினார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, மார்கோ ரூபியோ உடனான சந்திப்பை அடுத்து பிரதமர் மோடி வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மார்கோ ரூபியோவை வரவேற்றில் மகிழ்ச்சி. இந்தியா - அமெரிக்கா இடையேயான ஆழமான ஒத்துழைப்புடன் கூடிய உத்திசார் உறவில் ஏற்பட்டுள்ள தொடர் முன்னேற்றங்கள் குறித்தும் பிராந்திய மற்றும் உலக அமைதி மற்றும் பாதுகாப்பு குறித்தும் நாங்கள் விவாதித்தோம். உலக நன்மைக்காக இந்தியாவும் அமெரிக்காவும் தொடர்ந்து நெருக்கமாக செயல்படும்" என குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சந்திப்பு குறித்து இந்தியாவுக்கான அமெரிக்க தூதர் செர்ஜியோ கோர் வெளியிட்டுள்ள பதிவில், "வெள்ளை மாளிகைக்கு வருகை தருமாறு பிரதமர் நரேந்திர மோடிக்கு அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் சார்பில் வெளியுறவு அமைச்சர் மார்கோ ரூபியோ அழைப்பு விடுத்தார்.

பாதுகாப்பு, வர்த்தகம், தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளில் அமெரிக்கா-இந்தியா இடையேயான ஒத்துழைப்பை ஆழப்படுத்துவதற்கான வழிகள் குறித்து நாங்கள் ஆக்கப்பூர்வமான விவாதத்தை நடத்தினோம். இத்துறைகள் நமது இரு நாடுகளையும் வலுப்படுத்தி, சுதந்திரமான இந்தோ-பசுபிக் பகுதியை வலுப்படுத்துகின்றன. இந்தியா அமெரிக்காவின் ஒரு முக்கிய கூட்டாளி" என தெரிவித்துள்ளார்.

'பெட்ரோல், டீசல் விலை உயர்வால் யாருக்கெல்லாம் பலன்?'

மோடிக்கு கார்கே கேள்வி

புதுடெல்லி,மே 24:

"தற்போதைய பெட்ரோல், டீசல் விலை உயர்வால் யாருக்கெல்லாம் பலன் கிட்டுகிறது என்று பிரதமர் நரேந்திர மோடி விளக்கம் அளிக்க வேண்டும்" என்று காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட சமூக வலைதளப் பதிவில், "ஒரு லிட்டர் பெட்ரோல் விலை ரூ.100-ஐ கடந்துள்ளது. மக்களின் பணம் தவணை முறையில் கொள்ளை அடிக்கப்படுகிறது. ஒரு காலத்தில் சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை மிகவும் குறைவாக இருந்தது. அந்தக் காலத்தில் இந்தியாவில் பெட்ரோல், டீசல் விலை குறைக்கப்படவில்லை. அப்போது மக்களின் பணம் பகிரங்கமாக கொள்ளை அடிக்கப்பட்டது.

அண்மையில் சட்டப்பேரவைத் தேர்தல்கள் நடைபெற்றன. இந்த தேர்தல்கள் முடிந்த உடனேயே பெட்ரோல், டீசல் விலையை மத்திய அரசு உயர்த்தியது. அண்மை காலத்தில் 3 முறை விலை உயர்த்தப்பட்டு உள்ளது.

இத்தாலி, ஆஸ்திரேலியா, ஜெர்மனி உள்ளிட்ட நாடுகள் கலால் வரியை குறைத்து, பெட்ரோல், டீசல் விலையை கட்டுப்படுத்தி உள்ளன. பிரிட்டன், அயர்லாந்து நாடுகளில் எரிசக்திக்காக சிறப்பு மானிய உதவிகள் வழங்கப்படுகின்றன. இந்தியாவில் தற்போதைய பெட்ரோல், டீசல் விலை உயர்வால் யார், யாரெல்லாம் பலன் அடைகிறார்கள் என்பது குறித்து பிரதமர் நரேந்திர மோடி விளக்கம் அளிக்க வேண்டும்" என்று மல்லிகார்ஜுன கார்கே வலியுறுத்தியுள்ளார்.

கச்சா எண்ணெய் விலை உயர்வு மற்றும் நீண்ட தொலைவு உள்ளிட்ட காரணங்களால் இந்திய எண்ணெய் நிறுவனங்களுக்கு தினசரி ரூ.1,000 கோடி இழப்பு ஏற்பட்டது. இதை ஈடுகட்ட கடந்த 15-ம் தேதி பெட்ரோல், டீசல் விலை லிட்டருக்கு தலா ரூ.3 உயர்த்தப்பட்டது. கடந்த மே 19-ம் தேதி ஒரு லிட்டர் பெட்ரோல், டீசல் தலா 90 பைசா அதிகரிக்கப்பட்டது.

இந்த நிலையில், கடந்த 10 நாட்களில் 3-வது முறையாக பெட்ரோல், டீசல் விலை இன்று உயர்த்தப்பட்டது. இதன்படி சென்னையில் ஒரு லிட்டர் பெட்ரோல் 82 பைசா உயர்ந்து ரூ.105.31-க்கும், ஒரு லிட்டர் டீசல் 87 பைசா உயர்ந்து ரூ.96.98-க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

'வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் கச்சா எண்ணெய் இந்தியாவின் 23 நிலையங்களில் சுத்திகரிப்பு செய்யப்படுகிறது. சுத்திகரிக்கப்பட்ட பெட்ரோல், டீசல் மீது மத்திய அரசு கலால் வரியை விதிக்கிறது. மாநில அரசுகள் வாட் வரியை விதிக்கின்றன. எண்ணெய் நிறுவனங்கள் சார்பில் பெட்ரோல் நிலைய உரிமையாளர்களுக்கு 10 சதவீதம் கமிஷன் வழங்கப்படுகிறது.

இவை அனைத்தையும் கணக்கிட்டு பெட்ரோல், டீசல் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. எண்ணெய் நிறுவனங்களின் இழப்பை ஈடுகட்ட கடந்த 10 நாட்களில் 3 முறை விலை உயர்த்தப்பட்டு உள்ளது. இதன்மூலம் ஒரு லிட்டர் பெட்ரோல், டீசல் ரூ.5 வரை விலை உயர்ந்திருக்கிறது. இதேபோல ஒரு கிலோ சிஎன்ஜி விலை ரூ.4 வரை விலை அதிகரித்திருக்கிறது.

விலை உயர்த்தப்பட்டாலும் எண்ணெய் நிறுவனங்கள் தொடர்ந்து இழப்பை சந்தித்து வருகின்றன' என்று எண்ணெய் நிறுவன வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனாதிபதி 3 நாள் பயணமாக சிக்கிம் செல்கிறார்

புதுடெல்லி,மே 23:

இந்திய குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு வருகிற 26-ந்தேதி முதல் 3 நாள் அரசு முறைப் பயணமாக இந்தியாவின் வடகிழக்கு மாநிலமான சிக்கிமிற்குச் செல்ல இருக்கிறார். இந்த பயணத்தின் போது அவர் பல்வேறு நிகழ்ச்சிகள் மற்றும் கல்வி சார்ந்த விழாக்களில் கலந்துகொள்ள இருக்கிறார்.

இந்த பயணத்தின் முக்கியமான நிகழ்வாக, 27-ந்தேதி சிக்கிம் பல்கலைக்கழகத்தின் 7-வது பட்டமளிப்பு விழா நடைபெறவுள்ளது. இதில் சிறப்பு விருந்தினராக கலந்துகொள்ளும் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, படிப்பை முடித்த இளம் பட்டதாரிகளுக்கு பட்டங்களையும், தரவரிசையில் முதலிடம் பிடித்த மாணவி, மாணவர்களுக்கு தங்க பதக்கங்களையும் நேரில் வழங்கி சிறப்பிக்கவுள்ளார்.

சிக்கிம் மாநிலத் தலைநகரான கேங்டாக்கில் மேலும் 2 நாட்கள் அங்கேயே தங்கி அங்கு திட்டமிடப்பட்டுள்ள பல்வேறு அரசு மற்றும் கலாச்சார நிகழ்ச்சிகளில் பங்கேற்பார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

சிக்கிம் மாநில ஆளுநர் மற்றும் முதலமைச்சரைச் சந்தித்து மாநில வளர்ச்சித் திட்டங்கள் குறித்துப் பேசவும், அங்குள்ள பழங்குடியின மக்களை நேரில் சந்தித்துக் கலந்துரையாடவும் செல்கிறார்.

பாதுகாப்பு மற்றும் நாட்டின் மிக உயரிய பதவியில் இருக்கும் ஒருவரின் வருகை என்பதால், சிக்கிம் மாநிலம் முழுவதும் தற்போது பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன.

அடுத்தவர் உழைப்பில் ஓட்டுண்ணியாய்..! காங்கிரஸ்க்கு எதிராக தி.மு.க. இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் கூட்டத்தில் தீர்மானம்

புதுடெல்லி,மே 24:

தி.மு.க. இளைஞர் அணியின் மாவட்ட மாநகர மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்றது.

தி.மு.க. இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், கட்சியின் தலைவர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டார். கூட்டத்தில் காங்கிரஸ் கட்சிக்கு எதிராக கடும் விமர்சனத்துடன் கூடிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்தில் காங்கிரஸ்க்கு நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் விவரம் வருமாறு:-

கடந்த பல தேர்தல்களிலும் தி.மு.க. தலைமையிலான கூட்டணியில் போட்டியிட்டுப் பல சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பெற்றது காங்கிரஸ். அவர்கள் கட்சியில் இருப்பவர்களை வைத்து கனப்பணி செய்யாத நிலையிலும் காங்கிரஸ் வெற்றிபெறக் காரணம் தி.மு.க. தொண்டர்கள்தான் என்பதை யாருமே மறுக்க முடியாது. மறைக்க முடியாது.

நடந்து முடிந்த தேர்தலிலும் தி.மு.க.வினரின் உழைப்பினால் 5 சட்டமன்ற உறுப்பினர்களை வென்றனர். தேசிய கட்சியாக இருந்துகொண்டு தேர்தலுக்கு முன்பாகவே மாநிலக் கட்சியான தி.மு.க. உறுப்பினர்களின் வாக்குகளால் மாநிலங்களவை உறுப்பினர் பதவியையும் பெற்றனர்.

இத்தனையும் பெற்றுக் கொண்டு, ஒரு நன்றி கூட சொல்லாமல், நன்றி உணர்ச்சியும் இல்லாமல் ஒரே இரவில் அணி மாறிச் சென்றிருக்கின்றனர். பழம்பெரும் பேரியக்கம் அரசியலின் அடிப்படை நாகரிகத்தைக்கூட படைப்பிடிக்க முடியாத அளவுக்கு, பதவி ஆசை அவர்களின் மூளையை மழுங்கடித்துவிட்டது.

அடுத்தவர் உழைப்பில் ஓட்டுண்ணியாய் உண்டு கொழுப்பதும், தன் தேவைக்கேற்ப கொள்கை மறந்து துரோகம் புரிவதும் காங்கிரசுக்குப் புதிதில்லைதான். இன்று நமக்குச் செய்த துரோகத்தை, நாளை பதவி கொடுத்த புதிய கூட்டாளிக்கும் செய்வார்கள். பயணிக்கும் படகிலேயே ஓட்டை போடும் அறிவாளிகள்தான் காங்கிரஸ் கட்சியினர்.

தி.மு.க. ஆட்சியமைக்க வேண்டும்என விரும்பியமக்களின் வாக்குகளால்தான் இன்று அவர்கள் அமைச்சரவையில் இடம் பெற்றுள்ளார்களே தவிர, இது அவர்கள் தங்கள் சொந்தச் செல்வாக்கினால் பெற்ற வெற்றியல்ல என்பதைக்கூட உணராமல், வரலாறு படைத்துவிட்டதாக உளறுகிறார்கள்.

சொந்த உழைப்பில் ஒருநாளும் வெற்றி பெற முடியாமல், நம்பியவர்களுக்கெல்லாம் துரோகமிழைக்கும் அறமில்லாத காங்கிரஸ் கட்சிக்கு இந்தக் கூட்டம் தனது வன்மையான கண்டனத்தைப் பதிவு செய்கிறது.

இவ்வாறு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ADVERTISING
FOR ALL TYPES OF NOTICE ADS
➢ Public Notice
➢ Loss of Share
➢ Legal Notice
➢ Merger
➢ Tender Notice
➢ Acquisition
➢ Society Notice
➢ AFR, UFR, etc.
for just Rs. 249/- only in Daily Print Paper
ஆனந்த பாஸ்கர் 9337501889, 7789441009
Email: anandabhaskarnews@gmail.com

Follow our WhatsApp Channel
PADMA DIGITAL BROADCAST
Tamilnadu Epaper WhatsApp channel
Scan this QR code using the CAMERA to view or follow our Channel